ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர்: திரு. தா.முஹம்மது குதுரத்துல்லா

ந.க.31093/2020/அ5 நாள்:12.04.2024.

பொருள்: பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - ஈரோடு மாவட்டம் - ஈரோடு மாவட்ட வருவாய் அலகு - கோபிசெட்டிபாளையம் வட்டம், செய்யாம்பாளையம் கிராம உதவியாளராக பணிபுரிந்து பணியிடையில் 11.06.2018 அன்று காலமான வி.கே.ராமச்சந்திரன் என்பவரது மகள் திருமதி.ஆர்.மணிமேகலை என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.4318/2019/அ5 நாள்.04.03.2019.
2. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (க்யூ-1) துறை நாள்:08.03.2023.
3. அரசுக் கடித எண்.5532/ஜி2/2023, மனிதவள மேலாண்மைத் துறை நாள்:20.09.2023.
4. சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். ஆ.கு.3/4600/2024 நாள்:28.02.2024.

□□□□□□□

**ஆணை:**

ஈரோடு மாவட்ட வருவாய் அலகில் பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை வருவாய் ஆய்வாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு திருமதி.ஆர்.மணிமேகலை என்பவர் 05.03.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வை 2-ல் காணும் அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (க்யூ-1) துறை நாள்:08.03.2023 மற்றும் அரசுக் கடித எண்.5532/ஜி2/2023 நாள்:20.09.2023-ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை பணிநியமன அலுவலரே பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின் பேரிலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a)(i)-ன்படியும் திருமதி.ஆர்.மணிமேகலை என்பவரது பணியினை பணியேற்ற நாளான 05.03.2019 முற்பகல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழ்கண்ட பட்டியலில் கலம்-04-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

Scanned by CamScanner

| வ. எண் | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திருமதி.ஆர்.மணிமேகலை, இளநிலை வருவாய் ஆய்வாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கோபிசெட்டிபாளையம். | 05.03.2019 முற்பகல் | 05.03.2019 முற்பகல் |

மேலும், தனியருக்கு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

தனியரது பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை பணிப்பதிவேட்டில் பதிவுசெய்து அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்ட அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-தா.முஹம்மது குதூரத்துல்லா,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
ஈரோடு.

//உண்மைநகல்/உத்தரவுப்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்:-

திருமதி.ஆர்.மணிமேகலை,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கோபிசெட்டிபாளையம்.

22.4.2024

நகல் : வருவாய் கோட்ட அலுவலர், கோபிசெட்டிபாளையம்.

நகல்: கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : "அ5" - இருப்புக் கோப்பிற்கு.

Scanned by CamScanner